**வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் பகுதி 02 - 2018**

---

வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 சனவரி 17 ஆம் திகதிய 5873 – எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய விவசாய அமைச்சும், தற்போதைய கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அனுராதபுரம், மட்டக்களப்பு, மொனராகலை, மாத்தளை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ள சிறுநிலவுடைமை விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை முன்னேற்றுதல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்ட நடவடிக்கைகள், குறிப்பாக விவசாயிகளுக்கான பயிற்சியளித்தலும் இயலளவைக் கட்டியெழுப்புதலும், நவீன விவசாயத் தொழில்நுட்பப் பூங்காக்கள், உற்பத்தியும் சந்தை உட்கட்டமைப்பும், பகுப்பாய்வும் கொள்கை ஆலோசனை உதவியும் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு எனும் 05 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9,175.88 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 62.87 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 9,121.88 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 62.50 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதித் தொகையான ரூபா 54 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 01 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இணைந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டம் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்டம் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை/ கணக்காய்வுச் சிக்கல்கள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 756 | செயற்திட்டத்தால் ரூபா 105.57 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டின் போது பொருள் மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அத்தகைய சொத்துக்கள் செயற்திட்டத்தின் கண்காணிப்புப் பிரிவிலும் ஏனைய மாகாணக் காரியாலயங்களிலும் உள்ள இடம் குறித்து கணக்காய்வில் சரிபார்க்கப்பட முடியாதிருந்தது. | வடக்கு, வடமத்திய மாகாண செயற்திட்ட அலுவலகங்களில் பொருள் மெய்மையாய்வு ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலத்தில் ஏனைய மாகாணங்களிலும் மேற்கொள்ளப்படும். | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் உள்ளபடிநிலை குறித்து பொருள் மெய்மையாய்வு ஒன்று நடாத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | செயற்பாடு | தாமதம் | தாக்கம் | தாக்கங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| நவீன விவசாய தொழில்நுட்பப் பூங்கா | சர்வதேச சேவை வழங்குனரின் ஆட்சேர்ப்பு | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் சர்வதேச சேவை வழங்குனரின் ஆட்சேர்ப்பு | நவீன விவசாய தொழில்நுட்பப் பூங்காக்களைத் தாபிப்பதனூடாக திறன் பயிற்சிகள் செயற்திட்டத்தால் | வரிசை அமைச்சுடனான இணக்கமின்மைகள் |

| | |
|---|---|
| நடைமுறை பூர்த்தியடைந்திருக்கவில்லை. | வழங்கப்படும் குறிக்கோள் குறித்த காலப்பகுதியில் எய்தப்பட முடியாதுள்ளது. |

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** கருத்துத் தெரிவிக்கப்படவில்லை

**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** வேளாண்மைச் செயன்முறைகள் மீதான அறிவை வழங்கக்கூடிய சர்வதேச திறன் பயிற்சியை கைக்கொள்ளக்கூடிய வகையில் சர்வதேச சேவை வழங்குனரைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**3.2 மனிதவள முகாமைத்துவம் தொடர்பான சிக்கல்கள்**

| புதவியணி நிலை | பதவிகளின் எண்ணிக்கை | | | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| | அங்கீகாிக்கப்பட்டது | 2018 திசெம்பர் 31 இல் உள்ளபடியானது | வெற்றிடங்களின் எண்ணிக்கை | | | |
| செயற்திட்ட பொறியியலாளர்கள் | 05 | 04 | 01 | செயற்திட்டச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படும் | வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்ற போதிலும் குறைவான சம்பளம் காரணமாக நீண்ட காலமாக பொறியியலாளர் பதவி நிரப்பப்படாத நிலையில் காணப்பட்டது. | செயற்திட்டத்தின் சுமூகமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு முக்கிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| பிரதிச் செயற்திட்டப் பணிப்பாளர் | 01 | - | 01 | | | |
| கொள்வனவு நிபுணர் | 01 | - | 01 | | | |
| நிதி முகாமையாளர் | 01 | - | 01 | | | |